TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074800

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 3/2022 Date: நாள் 15.06.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7 of the prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.06.2022 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30Hrs Time to : நேரம் வரை 16.30 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.06.2022 Time : நேரம் 20.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.06.2022 Time : நேரம் 20.00 Hrs

4. Type of Information : Written/ Oral : ✓ (Written)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 3 km. தெற்கு, மதுவிலக்கு அமல் பிரிவு, நாகப்பட்டினம்.
Beat Number : - முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. அ. தனசேகரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் அர்ஜுனன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/2022
(d) Nationality : நாட்டினம் இந்தியர்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் தற்காலிக மாவட்ட தனி ஆய்வுக்குழு அலுவலர்.
(g) Address : முகவரி தேர்தல் பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட தனி ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திருமதி. S. ஆரோக்கிய ஜெனிஃபர் மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல் பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2) திரு. K. சேகர், உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல் பிரிவு, நாகப்பட்டினம், 3) திருமதி. M. சரோஜினி, WHC 475, தலைமைக்காவலர், மதுவிலக்கு அமல் பிரிவு, நாகப்பட்டினம்.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— வாதியால் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று **15.06.2022** ஆம் தேதி இரவு **20.00** மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு. அ.தனஞ்செயன், துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் கொடுத்த அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. 15.06.2022 நாகப்பட்டினம் அனுப்புநர், அ.தனஞ்செயன், துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம் அய்யா, தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 15.06.2022 ஆம் தேதி காலை 11.30 மணி முதல் மாலை 16.30 மணி வரை நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது 1)திருமதி.S.ஆரோக்கிய டுனீஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து "INS" என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரிலிருந்து ரூபாய்

(தொடர்ச்சி இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/6/2022 DT (Election) DY RO

[signature] 15.6.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.06.2022

Name: பெயர் க.ரமேஷ் குமார்.
Rank: நிலை ......................No. எண் ..........

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-

16,860/- மற்றும் "INS" என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரும், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து "SI" என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரிலிருந்து ரூபாய் 11,240/-, அவரது பேண்டு பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து ரூபாய் 1,320/- மற்றும் "SI" என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரும் மற்றும் 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவரின் பிரௌன் கலர் ஹேண்ட் பேக்கிலிருந்து பெயர்கள்/பதவி எழுதப்பட்ட தனித்தனியாக 8 கவர்களிலிருந்து ரூபாய் 41,220/-ம், பர்ஸிலிருந்து ரூபாய் 5,000/-ம், ஆகமொத்தம் ரூபாய் 46,220/- மற்றும் பெயர்கள்/பதவி குறிப்பிடப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த 8 காக்கி நிற கவர்கள் மற்றும் மேற்படி கவர்கள் வைத்திருந்த Brown Colour Hand Bag ஆகியவற்றை குற்றமுறு எண்ணத்துடன் சாராய வியாபாரிகளிடம் வாராந்திர மாமூலாக கையூட்டாக பெற்ற தொகை என்ற அடிப்படையிலும், சரியான விளக்கம் தராமல் வைக்கப்பட்டிருந்த பணமும், மகஜரில் கண்டபடி மொத்தப்பணம் ரூபாய் 75,640/-, பெயர்கள்/பதவிகள் எழுதப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த 10 காக்கி நிற கவர்கள், கவர்கள் வைத்திருந்த Brown Colour Hand Bag மற்றும் 1)Rough Duty Roster, 2)பொது நாட்குறிப்பு, 3)Pro-Vehicle Register ஆகிய பதிவேடுகள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. 1)திருமதி.S.ஆரோக்கிய டுனீஸ்மேரி, காவல் ஆய்வாளர், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் ஆகியோரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் ரூபாய் 75,640/-, பெயர்கள்/பதவிகள் எழுதப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த 10 காக்கி நிற கவர்கள், கவர்கள் வைத்திருந்த Brown Colour Hand Bag மற்றும் கைப்பற்றப்பட்ட தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் 1)திருமதி.S.ஆரோக்கிய டுனீஸ்மேரி, காவல் ஆய்வாளர், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)திருமதி.S.ஆரோக்கிய டுனீஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் ஆகியோரின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) அ.தனஞ்செயன் 15/06/2022 (அ.தனஞ்செயன்), துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 15.06.2022 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் அரசு மருத்துவ மனைக்கு எதிர்புறமுள்ள நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல் பிரிவு அலுவலகத்தை திரு.அ.தனஞ்செயன்,

வயது.47/2022, த/பெ.அர்ஜுனன், துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம், மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம், திரு.G.ரமேஷ் குமார், ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம், திருமதி.M.அருள்பிரியா, ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.அ.தனஞ்செயன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல் பிரிவு அலுவலகத்தில் ஒவ்வொரு வாரமும் நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு எல்லைக்குட்பட்ட அனைத்து சாரய வியாபாரிகளிடமும், ஒவ்வொரு வாரமும் திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம் அவர்கள் தலைமையிலான காவல் ஆளினர்கள் மாமூலாக கையூட்டு கேட்டு பெற்று ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை காலை நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலர்கள் மேற்படி மாமூல் பணத்தினை பிரித்து எடுத்துகொள்வதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை இன்று 15.06.2022 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் நாகப்பட்டினம் தேர்தல்பிரிவு துணை வட்டாட்சியராகிய என்னை தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்மூலம் நியமனம் செய்து அனுப்பியதன்பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 11.00 மணிக்கு வந்தும், அங்கிருந்து திரு.G.ரமேஷ் குமார், காவல் ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 15.06.2022 ஆம் தேதி காலை 11.10 மணிக்கு புறப்பட்டு, நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்திற்கு காலை சுமார் 11.30 மணிக்கு வந்து, அறிமுகப்படுத்திக் கொண்டு மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகமானது நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள நாகப்பட்டினம் கியூ-பிரிவு அலுவலக கட்டிடத்திற்கு பின்புறம் நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்திற்கு கிழக்கு பக்கம் நாகப்பட்டினம் கியூ-பிரிவு அலுவலக கட்டிடமும், மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் நாகப்பட்டினம் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு அலுவலகம் மற்றும் நாகப்பட்டினம் அனைத்து மகளிர் காவல் நிலையமும், மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் கடலோர பாதுகாப்பு குழுமம்(கடற்கரை காவல் நிலையம்) அலுவலக கட்டிடமும், மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்திற்கு தென்புறம் காவலர் குடியிருப்பு பகுதியும்

உள்ளது. மேற்படி நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்தின் கிழக்கு பார்த்த நுழைவு வாயிலினை அடுத்து சிறிய ஹாலும், மேற்படி ஹாலுக்கு தென்புறம் இரண்டு கழிவறைகள் மற்றும் குளியலறைகள் உள்ளது. மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலக கட்டிடத்திற்கு தென்புறம் Property வைக்கும் கட்டிடமும் உள்ளது. மேற்படி மதுவிலக்கு அமல்பிரிவு அலுவலகத்தின் ஹாலின் வடமேற்கில் ஆய்வாளர் இருக்கை மற்றும் டேபிளும், மேற்படி ஹாலின் வடமேற்கில் எழுத்தர் திருமதி.சரோஜினி, WHC 475 என்பவரது இருக்கையும், மேற்படி ஹாலின் தென்மேற்கில் உதவி ஆய்வாளர் திரு.K.சேகர் அவர்களின் இருக்கை மற்றும் டேபிளும், மேற்படி ஹாலின் தென்கிழக்கில் கணினியுடன் கூடிய டேபிள் மற்றும் சேரும் உள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது 1)திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ் மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், 4)திரு.G.தேவராஜ், HC.757 ஆகியோர் இருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை ஆய்வாளர்கள் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் திருமதி.M.அருள்பிரியா மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களையும், அலுவலகத்தையும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் சரியான முகாந்திரம் கூறிய தொகை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல்பிரிவு எல்லைக்குட்பட்ட சாராய வியாபாரிகளிடமிருந்து மாமூலாக கேட்டு பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.75,640/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், I/c. நாகப்பட்டினம் | 270 | 16,860 |
| 2 | திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் | 60 | 12,560 |
| 3 | திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் | 390 | 46,220 |
| 4 | திரு.G.தேவராஜ், HC.757, மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் | 600 | - |
| | | **1,860** | **75,640** |

திடீர் சோதனையின்போது திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து "INS" என்று எழுதப்பட்ட கவரிலிருந்த ரூபாய் 16,860/- மற்றும் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 270/-யையும் ஆஜர் செய்தார். மேற்படி காவல் ஆய்வாளர் திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ்மேரி என்பவர் "INS" என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 30 = 15,000, 200 x 6 = 1,200, 100 x 6 = 600, 20 x 3 = 60 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 16,860/- பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி காவல் ஆய்வாளர் திருமதி.S.ஆரோக்கிய டுனிஸ்மேரி என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் நாகப்பட்டினம் சாராய வியாபாரிகளிடம் வாங்கிய வாராந்திர மாமூல் பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூபாய் 16,860/- சாராய வியாபாரிகளிடம் வாராந்திர மாமூலாக பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி ரூபாய் 16,860/- மற்றும் "INS" என்று எழுதப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி நிற கவர் ஒன்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 270/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 270/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவர் அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து "SI" என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ரூபாய் 11,240/- மற்றும் அவரது பேண்டு பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து ரூபாய் 1,320/-யையும், பர்ஸில் தனியாக இருந்த ரூபாய் 60/- ஆகியவற்றை ஆஜர் செய்தார். மேற்படி உதவி ஆய்வாளர் திரு.K.சேகர் என்பவர் "SI" என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 16 = 8,000, 200 x 5 = 1,000, 100 x 22 = 2,200, 20 x 2 = 40 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 11,240/- பணமும், பர்ஸில் தனியாக 500 x 1 = 500, 100 x 8 = 800, 20 x 1 = 20 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 1,320/- பணமும் இருந்தது. மேற்படி பணம் பற்றி உதவி ஆய்வாளர் திரு.K.சேகர் என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் நாகப்பட்டினம் சாராய வியாபாரிகளிடம் வாங்கிய வாராந்திர மாமூல் பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூபாய் 11,240/- மற்றும் ரூபாய் 1,320/- சாராய வியாபாரிகளிடம் வாராந்திர மாமூலாக பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூபாய் 12,560/- மற்றும் "SI" என்று எழுதப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த காக்கி நிற கவர் ஒன்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 60/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 60/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவரின் பிரௌன் கலர் ஹேண்ட் பேக்கிலிருந்து தனித்தனியாக 8 கவர்களிலிருந்தும், பர்ஸிலிருந்தும் மொத்தம் ரூபாய் 46,220/-யையும், ஹேண்ட் பேக்கிலிருந்த மற்றொரு பர்ஸிலிருந்து ரூபாய் 310/-யையும் எடுத்து

ஆஜர் செய்தார். மேற்படி திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவரின் பிரௌன் கலர் ஹேண்ட் பேக்கிலிருந்து ஆஜர் செய்த 1)“Kesavan” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 11 = 5,500, 100 x 1 = 100, 10 x 2 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 2)“Saro” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 11 = 5,500 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,500/- பணமும், 3)“Bakkiyarj” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 9 = 4,500, 200 x 5 = 1,000, 100 x 1 = 100, 20 x 1 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 4)“Elango” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 11 = 5,500, 100 x 1 = 100, 20 x 1 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 5)“Senthil” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 8 = 4,000, 100 x 16 = 1,600, 20 x 1 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 6)“Cholan” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 11 = 5,500, 100 x 1 = 100, 20 x 1 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 7)“Anish” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 11 = 5,500, 100 x 1 = 100, 20 x 1 = 20 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,620/- பணமும், 8)“Dri” என்று எழுதப்பட்ட கவரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 4 = 2,000 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 2,000/- பணமும், 9)பர்ஸில் தனியாக இருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 500 x 9 = 4,500, 200 x 2 = 400, 100 x 1 = 100 என்ற விபரப்படியான பணம் ரூபாய் 5,000/- பணமும் ஆக மொத்தம் ரூபாய் 46,220/- பணமும் இருந்தது. மேற்படி பணம் பற்றி எழுத்தர் திருமதி.M.சரோஜினி, WHC 475 என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் நாகப்பட்டினம் சாராய வியாபாரிகளிடம் வாங்கிய வாராந்திர மாமூல் பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூபாய் 46,220/- சாராய வியாபாரிகளிடம் வாராந்திர மாமூலாக பெற்ற கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூபாய் 46,220/-, பெயர்கள்/பதவி குறிப்பிடப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த 8 காக்கி நிற கவர்கள் மற்றும் மேற்படி கவர்கள் வைத்திருந்த Brown Colour Hand Bag ஆகியவை மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 310/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 310/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது திரு.G.தேவராஜ், HC.757, மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி திரு.G.தேவராஜ் என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் அன்றைய தினம் செலவுக்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் ரூபாய் 600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது

1)திருமதி.S.ஆரோக்கிய டூனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், 4)திரு.G.தேவராஜ், HC.757 ஆகியோரிடம் மேற்படி 10 கவர்களில் எழுதப்பட்ட எழுத்துகள் யாருடையது என்று விசாரணை செய்தபோது, மேற்படி 10 கவர்களில் எழுதப்பட்ட எழுத்துகள் பெண் முதல் நிலை காவலர் 684 திருமதி.R.அம்பிகா என்பவரால் எழுதப்பட்டதாக தெரிவித்தனர். மேற்படி திடீர் சோதனையின்போது குற்றமுறு எண்ணத்துடன் சாராய வியாபாரிகளிடம் வாராந்திர மாமூலாக கையூட்டாக பெற்ற தொகை என்ற அடிப்படையிலும் சரியான விளக்கம் தராமல் வைக்கப்பட்டிருந்த மேற்படி விவரபடியான மொத்தப்பணம் ரூபாய் 75,640/-, பெயர்கள்/பதவிகள் எழுதப்பட்டு பணம் வைக்கப்பட்டிருந்த 10 காக்கி நிற கவர்கள், கவர்கள் வைத்திருந்த Brown Colour Hand Bag மற்றும் 1)Rough Duty Roster, 2)பொது நாட்குறிப்பு, 3)Pro-Vehicle Register ஆகிய பதிவேடுகள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திருமதி.S.ஆரோக்கிய டூனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 15.06.2022 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று **15.06.2022** ஆம் தேதி இரவு **20.00** மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.**03/2022**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 15.06.2022
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் 1)திருமதி.S.ஆரோக்கிய டூனிஸ்மேரி, காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, வேதாரண்யம், கூடுதல் பொறுப்பு நாகப்பட்டினம், 2)திரு.K.சேகர், உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம், 3)திருமதி.M.சரோஜினி, WHC 475, எழுத்தர், மதுவிலக்கு அமல்பிரிவு, நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

15.06.2022.
(க.ரமேஷ் குமார்)
**காவல் ஆய்வாளர்,**
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
நாகப்பட்டினம்